Crl.Misc.39

# D E P O S I T I O N  O F  W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.55/2018

**P.W.**4

| | |
|---|---|
| Name | : திரு.நீலகண்டன் |
| Father/Husband Name | : திரு.எட்டியப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 4 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வீராபுரம் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி வேதா எனது அண்ணன் ஆவார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 1.5.2014 ம் தேதி நான் வீட்டிலிருந்து கிளம்பி வேலைக்கு சென்று கொண்டிருந்தபோது காலை 7.00 மணியளவில் கருமாறப்பாக்கம் அருகே வந்து கொண்டிருந்தபோது போலிசார் அங்கு இருந்தார்கள். அந்த இடத்தில் நகைகள் காணாமல் போனது குறித்து விசாரித்து கொண்டிருந்ததாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு போலிசார் ஆவணம் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

அதில் நானும், சாட்சி வேதாவும் சாட்சி கையெழுத்து செய்தோம். **(பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் எழுதியிருந்த விவரங்களை படித்து பார்த்தேன். அதில் 3 பக்கங்களில் எழுதப்பட்டு இருந்தன. ஒரு கையெழுத்து மட்டும் போட்டேன். அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தன என்றால் நினைவில்லை. என்னிடம் கையெழுத்து வாங்கிய திருக்கழுக்குன்றம் காவல் நிலைய காவலரை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கியதாக சொல்வது தவறு என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.